செ.வெ.எண்:31 நாள்:16.08.2018

**தூத்துக்குடி மாவட்டத்தில், வருவாய்த்துறையின் மூலம் 17.08.2018 அன்று பல்வேறு கிராமங்களில் அம்மா திட்ட முகாம் நடைபெறும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

அனைத்து கிராமங்களில் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவை வழங்க தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள அம்மா திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டத்தில் தளவாய்புரம் கிராமத்திலும், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் கொங்கராயக்குறிச்சி கிராமத்திலும், திருச்செந்தூர் வட்டத்தில் லெட்சுமிபுரம் கிராமத்திலும், சாத்தான்குளம் வட்டத்தில் மீரான்குளம் பகுதி-1 கிராமத்திலும், கோவில்பட்டி வட்டத்தில் ஊத்துப்பட்டி கிராமத்திலும், விளாத்திகுளம் வட்டத்தில் கே.தங்கம்மாள்புரம் கிராமத்திலும், எட்டயபுரம் வட்டத்தில் மீனாட்சிபுரம் கிராமத்திலும், ஓட்டப்பிடாரம் வட்டத்தில் வேப்பலோடை கிராமத்திலும், கயத்தாா் வட்டத்தில் தொட்டன்பட்டி கிராமத்திலும் 17.08.2018 (வெள்ளிக்கிழமை) அன்று வட்டாட்சியா்கள் தலைமையில் அம்மா திட்ட முகாம் நடைபெறவுள்ளது. மேற்படி முகாம்களில் மக்களின் குறைகளை தீா்க்கும் வண்ணம் முதியோா் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனை பட்டாக்கள், உழவா் பாதுகாப்பு அட்டை, பிறப்பு - இறப்பு சான்றுகள், சாதிச்சான்றுகள், மற்றும் வருவாய் துறையினரால் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகள் குறித்த விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு உடனடியாக பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட உள்ளது.

இந்த முகாம்களில் பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறாா்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.